# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
************

முறையீட்டு மனு எண்: 0096/2017/ந

ஆணை எண்: 176/2017

நாள்: 30/06/2017

திரு. S.A. வேணு கோபால்,
10, வெங்கடாசலம்மாள் தெரு,
சத்தியமங்கலம்,
ஈரோடு மாவட்டம் - 638 401. – **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி,
பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம். – **எதிர் மனுதாரர்**

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. S.A. வேணுகோபால் என்பவரது 26.4.2017 நாளிட்ட முறையீட்டு மனு 28.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்.0096/2017- ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் மனுதாரர் கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கடைசியாக உதவியாளராக பணியாற்றியபோது வயது முதிர்வின்காரணமாக 30.09.2009ல் குற்றச்சாட்டுகளை நிலுவையில் வைத்து கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆணையரது செயல் முறைகள் ந.க.எண்.240/2009/சி1 நாள்:30.09.2009ன்படி ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மனுதாரர் 20.07.2001 முதல் 18.12.2003 வரை பொள்ளாச்சி நகராட்சியில் வருவாய் ஆய்வாளராக பணி புரிந்துள்ளார்.

மனுதாரர் 24.09.2009 அன்று சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தொலைபேசி செய்தியின் அடிப்படையில் பொள்ளாட்சி நகராட்சி நிர்வாகம் தன் மீது குற்றச்சாட்டு குறிப்பாணை ஏற்படுத்தி 25.9.2009 அன்று கோபிசெட்டிபாளையத்தில் தனக்கு சார்வு செய்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும். தன்னை நிபந்தனைகளுடன் ஓய்வு பெற அனுமதித்த தடையின்மைச் சான்றுடன் கூடிய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் ந.க.எண்.57527/2008/கே1-2 நாள்:26/09/2009ல் மேற்படி குற்றச்சாட்டு குறிப்பாணை விவரம் சேர்க்கப்பட்டுள்ளதையும் தெரிவித்துள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு 09.11.2009-ஆம் நாளன்று தனது தற்காப்பு முகாந்திரத்தினை தெரிவித்துவிட்டதாகவும் அதன் பிறகு 8 ஆண்டுகளாக இக்கோப்பின் மீது எவ்விதமான நடவடிக்கையும் பொள்ளாட்சி நகராட்சி நிர்வாகத்தால் எடுக்கப்படவில்லை எனவும் விசாரணை அலுவலரை நியமனம் செய்து விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இந்த குற்றச்சாட்டுக் குறிப்பாணை முடிக்கப்படாமல் உள்ளதால் தனக்கு நிரந்தர ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்கள் கிடைக்காமல் உள்ளதென மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும், தொலைபேசி செய்தியினை வைத்து நடவடிக்கை எடுக்க இயலுமா? குற்றச்சாட்டு குறிப்பாணை ஏற்படுத்த தொலைபேசி அறிவுரை வழங்க இயலுமா? போன்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் உள்ளதெனவும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் இதனை ஆய்வு செய்து உரிய உத்திரவு வழங்குமாறு மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார். தொடர்புடைய ஆவண நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் கோரியுள்ள விளக்கங்கள் துறைத் தலைமை அலுவலகத்திலிருந்தே வழங்கப்பட வேண்டுமென இம்முறைமன்ற நடுவத்தால் கருதப்படுகிறது. இருப்பினும் , பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (8)ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளவாறான நிர்வாக சீர்கேடு, அசாதாரண காலதாமதம் உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரது தற்காப்பு பதிலறிக்கையினை சமர்ப்பித்திடுமாறு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0096/2017/ந நாள்:04/05/2017 மூலம் ஆணையிடப்பட்டது. மேலும், முறையிட்டு மனுதாரர் 27.06.2017 அன்று ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை அளிக்குமாறு கோரி அழைப்பாணை (அ.ம.எண்.0096/2017/ந நாள்:23.05.2017). அதே நாளன்று (27.06.17) நகராட்சி ஆணையரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

இதனிடையே பொள்ளாச்சி நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.சி1/1193/2009 நாள்:15.05.2017, இம்முறைமன்ற நடுவத்திற்கு 29.05.2017 அன்று வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் "...ஒய்வு பெற்ற பணியாளர்கள் தொடர்பாக நகராட்சி ஆணையர் அவர்களால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால்தான் விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும் குற்றச்சாட்டு குறிப்பாணை தொடர்பாக விசாரணை அலுவலர் நியமனம் மற்றும் இறுதி உத்திரவு வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் நகராட்சி நிர்வாக அலுவலர் அவர்களால் தான் மேற்கொள்ளப்படுமெனவும்..." தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரரது 16.06.2017 நாளிட்ட கடிதத்தில், தனது உடல்நிலை காரணமாக 27.06.2017 அன்று விசாரணைக்கு தன்னால் வர இயலவில்லை என தெரிவித்துள்ளார். அத்துடன் தன் மீது ஏற்படுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மீதான சில விவரங்களையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் சம்பந்தப்பட்ட தணிக்கைப் பத்திகள் அனைத்தும் நீக்கம் செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து 27.06.2017 அன்று விசாரணைக்கு ஆஜரான பொள்ளாச்சி நகராட்சி உதவி செயற் பொறியாளர் மற்றும் நகராட்சி ஆணையர் (பொ) அவர்களிடம் விவரங்கள் கோரப்பட்டன. அவ்வமயம் திரு. J. சீனிவாசன் வருவாய் உதவியாளர் நகராட்சியில் இறுசால் செய்யாமல் தொகையினை கையாடல் செய்ததை மேற்பார்வையாளர் என்ற நிலையில், இதனை சரியாக மேற்பார்வை செய்யவில்லை என்ற ஒரு தணிக்கைத் தடை மட்டும் நிலுவையில் உள்ளதென தெரிவிக்கப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டிற்கு (கையாடல்) நேரடி பொறுப்பான திரு. J. சீனிவாசன் என்ற பணியாளர் காலமெய்திவிட்டாரெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் உரிய இறப்பு சான்று பெற்று இத்தணிக்கைத் தடையினை நீக்கம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது முறைமன்ற நடுவர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், சட்டப்படியும், தார்மீக அடிப்படையிலும் நடவடிக்கை எடுத்து தணிக்கைத் தடையினை நீக்கம் செய்து காலஞ்சென்ற திரு. சீனிவாசன் குடும்பத்திற்கும் மற்றும் முறையீட்டு மனுதாரர் திரு. வேணுகோபால் ஆகிய இருவருக்கும் உரிய தீர்வுகளையும் பலன்களையும் வழங்கிட உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்பட்டது.

முறைமன்ற நடுவ ஆணைகளின்படி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நகராட்சி ஆணையரால் உறுதி அளிக்கப்பட்டு வாக்குமூலம் சமர்ப்பிக்கப்பட்டது வாக்குறுதியோடு,

சட்டப்படியும், தார்மீக அடிப்படையிலுமான தீர்வுகளையும் விரைவில் நிறைவேற்றுமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. S.A. வேணு கோபால்,
   10, வெங்கடாசலம் சின்ன வீதி,
   சத்தியமங்கலம்,
   ஈரோடு மாவட்டம் - 638 401.

2. நகராட்சி ஆணையர்,
   பொள்ளாச்சி நகராட்சி,
   பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல்

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருப்பூர் - 1.

2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5.